**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066948

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2019** FIR No.: மு.த.அ. எண் **10/2019** Date: நாள் **29.08.2019**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act 1988** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: **As Amended by The Prevention of** Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: **Corruption (Amendment) Act 2018** Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **28.08.2019** **11.30 hrs** Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **29.08.2019** Time நேரம் : **0900 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time நேரம் : **0900 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 70 கி.மீ. தென்மேற்கு**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **திருமுட்டம் வட்டாட்சியர் அலுவலகம்**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **M. கமுர் நிஷா** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **மாபூஷா,**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **கூலி** (g) Address : முகவரி **நெ.183, மேற்கு தெரு, T.பவழங்குடி, ஒட்டிமேடு அஞ்சல் திருமுட்டம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1) கண்ணன், தாசில்தார், திருமுட்டம்,**
**2) அருள்பிரகாசம், துணை தாசில்தார், திருமுட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதமில்லை.**

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 29.08.2019 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, அலுவலகம் ஆஜர் செய்த கடலூர் மாவட்டம், திருமுட்டம் தாலுக்கா, ஒட்டிமேடு அஞ்சல், T.பவழங்குடி 183, மேற்கு தெரு லேட் மாபூஷா என்பவாது மனைவி M.கமுர் நிஷா என்பவர், கணினி தட்டச்சு புகார் மனுவினை நடவடிக்கை எடுக்க கொடுத்துக்கொண்டார். புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் M.கமுர் நிஷா, க/பெ மாபூஷா (லேட்), 183, மேற்கு தெரு, T.பவழங்குடி, ஒட்டிமேடு அஞ்சல், திருமுட்டம் தாலுக்கா, கடலூர் மாவட்டம். பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கடலூர் மாவட்டம். ஐயா, நான் கடலூர் மாவட்டம் திருமுட்டம்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

- M. கமுர் நிஷா

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 29/8/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29-8-2019 at 10.30 hs

Name: பெயர் அ. திருவேங்கடம்
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க.ப பிரிவு கடலூர்.

தாலுக்கா, T.பவழங்குடி என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் மாபூஷா என்பவர் நெய்வேலி NLC நிறுவனத்தில் Canteen–ல் சமயல் வேலை செய்துவந்தார். அவர் கடந்த 2011 ஆம் வருடம் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். தற்போது நான் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் வாழ்வாதரத்துக்காக தற்காலிகமாக துப்புரவு பணியாளராக வேலை பார்த்து வருகிறேன். எனக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளார்கள். எனது மூத்த மகளுக்கு திருமணமாகிவிட்டது. அடுத்த மகளுக்கு திருமண ஏற்பாடு செய்துள்ளேன். எனது மகன் அப்துல் கலாம் தற்போது 11 ஆம் வகுப்பு படித்து வருகிறார். எனக்கு NLC நிறுவனத்தில் இருந்து எனது கணவருக்கு தர வேண்டிய பல்வேறு நிலுவை தொகைகளை பெறுவதற்காகவும், எனக்கும் எனது மகன் அப்துல் கலாம் ஆகிய இருவரின் எதிர்கால வேலை, மற்றும் அரசால் வழங்கப்படும் வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை இதர சலுகைகளை பெறுவதற்கும், எனக்கும் எனது மகனுக்கும் இருப்பிடச் சான்று, வருமான சான்று, ஜாதி சான்று, OBC சான்று கேட்டு இசேவை மையம் மூலம் விண்ணப்பம் செய்திருந்தேன். பின்னர் நான், இசேவை மையத்தில் எனக்கு கொடுத்த ரசீதுகள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் 28.08.2019ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு திருமுட்டம் தாலுக்கா அலுவலகம் சென்று தாசில்தார் திரு.கண்ணன் அவர்களை சந்தித்து நான் கொண்டுசென்ற ரசீது மற்றும் ஆவணங்களை அவரிடம் கொடுத்து சான்றிதழ்கள் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டேன். அப்போது தாசில்தார் என்னிடம் எனக்கு ரூ.7,000/– கொடுத்தால்தான் சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு செய்வேன் என கூறினார். மேலும் அவர் தாசில்தார் ரூம்முக்கு வந்த ஒரு நபரை அறிமுகப்படுத்தி இவர் துணை தாசில்தார் அருள்பிரகாசம் என்றும், இவரும் உங்களுக்கு சான்று வழங்க அப்ரூவ் செய்யவேண்டும், அதனால் அவரையும் கவணிக்கனும் என சொன்னார். பின்னர் நான், துணை தாசில்தார் அருள்பிரகாசத்திடமும் விளக்கம் சொன்னேன். அவரும் என்னிடம் சான்றுகளை அப்ரூவ் பண்ண தனக்கு தனியாக ரூ.7,000/– கொடுக்கவேண்டும் என கேட்டார். பணம் கொடுத்தால்தான் அப்ரூவ் பண்ணமுடியும் என உறுதியாக சொல்லிவிட்டார்கள். பின்னர் நான் அவர்களிடம் பணம் ஏற்பாடு செய்துகொண்டு

வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு சென்று யோசனை செய்து பார்த்ததில் லஞ்சமாக பணம் கொடுத்து சான்றிதழ்கள் வாங்க எனக்கும் என் மகனுக்கும் விருப்பம் இல்லை. என்னிடம் லஞ்சம் ரூ.7,000/– கேட்ட திருமுட்டம் தாசில்தார் கண்ணன் மற்றும் என்னிடம் தனக்கு தனியாக லஞ்சம் ரூ.7,000/– கேட்ட துணை தாசில்தார் அருள்பிரகாசம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க தங்களிடம் இன்று வந்து புகார் செய்கிறேன். என்னிடம் அவர்கள் இருவரும் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.14,000/–த்தை கொண்டுவந்துள்ளேன். அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் M.கமுர் நிஷா 29.8.2019). வாதி கொடுத்த புகார் மனுவின் உண்மை தன்மை பற்றி இரகசிய விசாரணை செய்ததில் புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருந்ததால், இன்று 29.08.2019ம் தேதி காலை 09.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 10/2019, U/s 7 Prevention of Corruption Act 1988, as Amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர், இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

அ. [signature]
29/8/19
காவல் ஆய்வாளர்
ஊ.த.க பிரிவு
கடலூர்.